# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII, Cr.P.C)
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET

Case No. C**C.No.15/2025**
Prosecution: **PW1**

**Deposition of the witness of LW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | S.சங்கவி | **District** | வேலூர் |
| **Father's Name** | சண்முகம் | **Calling** | உதவி இயக்குநர் – 1 |
| **Age** | 30 | **Religion** | -- |
| **Village/Town** | வேலூர் | **Caste** | -- |
| **Taluk** | வேலூர் | **Aadhar Card No.** | 923405172728 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of December 2025.

பிரிவு 355 BNSS-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது இந்த வழக்கின் முறையீட்டாளரான திருமதி. சாந்தினி பிரபா துணை இயக்குநர் அவர்கள் பணிமாறுதலாகி சென்று விட்டார். எனவே, அவரால் நேரில் வரயியலாததால் அவருக்கு பதிலாக ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் தற்போது முதலாம் வட்டம் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் வேலூர், உதவி இயக்குநராக பொறுப்பு வகித்து வருகிறேன். இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா தாலுக்கா MBT Cross Road க.எண்.701/1-D என்ற முகவரில் இயங்கும் தொழிற்சாலையான Sam Learthers யை 22.07.2025 அன்று முற்பகல் 11.20 மணிக்கு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் -1 அவர்களால் ஆய்வு செய்த போது தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு விதிகள் 1950, கீழ் மீறுதல்கள் கண்டறியப்பட்டது. அந்த நேரத்தில் பொறுப்பில் இருந்த முதலாம் வட்டம் துணை இயக்குநர் அவர்களால் 22.07.2025 அன்று முற்பகல் 11.20 மணிக்கு மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டது. மேற்படி ஆவணம் **அ.த.சா.ஆ.1** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. திரு. இமானுவேல், த/பெ.திரு.ஷமுவேல், வயது 58, என்பவர் தொழிற்சாலைகள் சட்டம் 1948 படிவம் 2 ன் படி தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளர் ஆவார். படிவம் 2 **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வின் அடிப்படையில் காணப்பட்ட முரண்பாடுகளுக்கு தொழிற்சாலைகள் சட்டம் 1948 ( திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு விதிகள் 1950, கீழ் உரிமையாளர் மற்றும் மேலாளருக்கு 24.07.2025 அன்று துணை இயக்குநர் – 1 அவர்களால் காரணம்காட்டும் அறிக்கை ஒப்புகை அட்டையுடன் அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி காரணம் காட்டும் அறிக்கை ஒப்புகை அட்டையுடன் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. உரிமையாளர் மற்றும் மேலாளரிடமிருந்து எந்தவித பதிலும் பெறப்படவில்லை. இதனை தொடர்ந்து உரிமையார் மற்றும் மேலாளர் மீது மேல் நடவடிக்கை தொடரபோவதாக ஒப்புகை அட்டையுடன் மேல் நடவடிக்கை கடிதம் 08.09.2025 அன்று அனுப்பப்பட்டது. மேல்நடவடிக்கை கடிதம் ஒப்புகை அட்டையுடன் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு வழக்கு முன்மொழிவு பிரேரணை 08.09.2025 அன்று சேலம், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் கூடுதல் இயக்குநருக்கு அனுப்பப்பட்டது. வழக்கு முன்மொழிவு பிரேரணை **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனை தொடர்ந்து மேற்கண்ட தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளரின் மீது வழக்கு தொடர பெறப்பட்ட வழக்கு அனுமதி ஆணை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார முதலாம் வட்டம் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு 19.09.2025 அன்று பெறப்பட்டது. வழக்கு அனுமதி ஆணை ஆவணம் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>முரண்பாடு – 1</u>**

தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) தமிழ்நாடு விதிகள் 1950 பிரிவு 6(1)(d) உடன் விதி 7(1)(2)(3) மற்றும் உடன் விதி 12 B(5) சட்டப்பிரிவு மற்றும் விதிகளின் படி தொழிற்சாலையின் உரிமையாளர் செலுத்தக்க அசல் உரிமம் இல்லாமல் 22.07.2025 அன்று 26 தொழிலாளர்களுடனும், 61.50 குதிரை சக்தி திறனுடைய இயந்திரங்களுடன் Manufacture of Shoe Upper உற்பத்தி பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது ஆய்வின் போது கண்டறியப்பட்டது. அவ்வாறு 26 தொழிலாளர்களுடனும், 61.50 குதிரை சக்தி திறனுடைய

இயந்திரங்களுடன் உற்பத்தி பணியை மேற்கொள்ள 2017 முதல் 2025 ஆம் ஆண்டு வரை உரிய உரிமத்ததொகையை வேலூர் இணை இயக்குநர் –1 தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களுக்கு http://dish.tn.gov.in என்ற வலைதளம் மூலமாக விண்ணப்பித்து உரிய உரிமச்சான்றினை பெறப்படவில்லை. 22.07.2025 அன்று ஆய்வின் போது கண்டறியப்பட்டது. மேற்கண்ட பிரிவு 6(1)(d) உடன் விதி 7(1)(2)(3) மற்றும் உடன் விதி 12 B(5) ன் கீழ் கடும் முரணாகும்.

**முரண்பாடு – 2**

தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) தமிழ்நாடு விதிகள் 1950 பிரிவு 6(1)(d) உடன் விதி 6(1)(2)(3) சட்டப்பிரிவு மற்றும் விதிகளின் படி தொழிற்சாலையின் உரிமத்தில் ஏதேனும் திருத்தம் இருந்தால் உரிய உரிம திருத்தம் மேற்கொள்ள வேலூர் இணை இயக்குநர் –1 தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களுக்கு விண்ணப்பித்து திருத்தம் செய்து உரிம சான்றினை பெறப்படவில்லை. என்பரை 22.07.2025 அன்று ஆய்வின் போது கண்டறியப்பட்டது. மேற்கண்ட பிரிவு 6(1)(d) உடன் விதி 6(1)(2)(3) ன் கீழ் கடும் முரணாகும். மேற்கண்ட இரண்டு முரண்பாடுகள் தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 ன் படி தண்டணைக்குரியதாகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

S/d.A.Daoudh Ammal,
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.